## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி
## OS. 1/2014 . நாள்.08.01.2025

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ரவி | **வயது** | 52 |
| **த/பெ. க/பெ.** | முனிக்குட்டி | **மதம்** | |
| **முகவரி** | நத்தகயம் | **தொழில்** | விவசாயம் |

**<u>பி.சா.3 ஆஜர். வாதிகள் தரப்பில் விசாரணை :</u>**

இவ்வழக்கை மூர்த்திக்கு எதிராக அவரது அக்காக்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மூர்த்தி எனக்கு 10 வருடமாக பழக்கம். மூர்த்தியின் தாத்தா, பாட்டி ஆகியோர்களை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம், சர்வே எண்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு அருகில் எனக்கு நிலம் எதுவும் இல்லை. வழக்கு தாவா சொத்துக்கள் பக்தவச்சலத்தின் மூதாதையர்கள் வழி சொத்து என்றால் பக்தவச்சலத்தின் சொத்தாகும். பக்தவச்சலத்தின் பெயரில் கிரைய ஆவணமோ மற்றும் உரிமை ஆவணங்கள் எதுவும் இல்லையென்றும் தாவா சொத்தானது பக்தவச்சலத்தின் மூதாதையர்கள் சொத்து என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது பக்தவச்சலத்துக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள எந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் அதை பொருத்து எனக்கு தெரியாது. நான் இன்னார் என்று நிருபித்த சாட்சியில் கையெழுத்திட்டுள்ள நிலையில் சார்பதிவாளர் அலுவலகத்திற்க்கு 12.00 மணியளவில் சென்றேன். நான் பத்திரப்பதிவு அலுவலகத்தில் இருந்தபோது பத்திரத்தை ஒப்படைத்தார்களா என்றால் நாங்கள் அனைவரும் சென்று தான் ஒப்படைத்தோம். நான் பத்திரத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். பத்திர எழுத்தர் அலுவலகத்தில் கையெழுத்து செய்யவில்லை. மேற்படி பத்திரத்தை எழுதும் வேலையை மூர்த்தி செய்தாரா என்றால் பக்தவச்சலமும், அவரது மனைவியும் தான் அந்த வேலையை செய்தார்கள். மேற்படி ஆவணத்தில் கையெழுத்து போடுவதற்க்கு முன்பே அந்த பத்திரத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 2 பத்திரங்களில் நான் இன்னார் என்று

நிருபித்த சாட்சியாக கையெழுத்து செய்துள்ள நிலையில் எந்த பத்திரத்தில் முதலில் கையெழுத்து செய்தேன் என்றால் மூர்த்தியின் தானபத்திரத்தில் முதலில் கையெழுத்து செய்தேன். 2–வதாக பக்தவச்சலத்தின் மகளுக்காக தயார் செய்த பத்திரத்தில் கையெழுத்து செய்தேன். அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. பத்திர அலுவலகத்தில் பத்திரத்தை ஒப்படைத்த பிறகு சாட்சி கையெழுத்து போடவேண்டும் என்று கூறியதால் கையெழுத்து போட்டேன்என்று சொன்னால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களில் என்ன சங்கதி எழுதப்பட்டுள்ளது என்றும், எந்தெந்த சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. மூர்த்தி தான் அழைத்து வந்தார். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் மூர்த்தி சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் வழக்கறிஞரிடம் நான் தான் விவரங்கள் சொன்னேன். மூர்த்திக்காக தயாரிக்கப்பட்ட பத்திரத்தில் அவரது சகோதரியும், அவரது சகோதரிக்காக தயாரிக்கப்பட்ட பத்திரத்தில் மூர்த்தியும் கையெழுத்து செய்தார்கள். பக்தவச்சலம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுவதும் பத்திரம் செய்துவிட்டார். நான் மீதி 2 பெண்கள் உள்ளார்கள் என்றும் அவர்களுக்கு சொத்துக்கள் எழுதவில்லையா என்று கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. மூர்த்தி பெயருக்கும், அவரது சகோதரி பெயருக்கும் வழக்கு சொத்துக்களை எழுத பக்தவச்சலத்துக்கு உரிமை கிடையாது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிகளும், அவரது தாயாரும் பத்திர அலுவலகத்திற்க்கு வந்து கையெழுத்து செய்ததாக நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், அவர்கள் அவ்வாறு எவ்வித கையெழுத்தும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு பங்குரிமை உடைய வழக்கு

சொத்துக்களை ஏமாற்றும் நோக்கத்தோடு பிரதிவாதி மூர்த்தி மோசடியாக ஆவணங்கள் தயார் செய்தார் என்றும், அவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் நிருபித்தவர் இடத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் தற்போதும் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையாகவே மேற்படி பத்திரம் எழுதப்பட்டிருந்தால் பத்திர பதிவு அலுவலகத்திலேயே ஆவணத்தில் கையெழுத்து செய்திருப்பேன் என்று சொன்னால் நான் பத்திர பதிவு அலுவலகத்தில் தான் கையெழுத்து செய்தேன். மூர்த்தி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.